***DEPOSITION OF WITNESS***
***(Chapter XX of BNSS)***

***IN THE COURT OF ADDITIONAL MAHILA, TIRUVARUR.***
***CC.No. 108/2024 – P.W. 5 (LW 7 )***

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபா | வயது | 43 |
| தகப்பனார் பெயர் | ரெங்கசாமி | ஜாதி | |
| தொழில் | Assistant Surgeon திருவாரூர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | திருவாரூர் |

**எதிரி ஆஜரில்லை. அவரது வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 06.02.2026*

**முதல் விசாரணை**

நான் கடந்த 29.08.2022 ம் தேதி அவசர சிகிச்சை பிரிவில் மாலை 6.13 மணியளவில் பணியில் இருந்தபோது புலிவலம் என்ற ஊரைச்சேர்ந்த பாப்பையன் மகள் 25 வயதுடைய குந்தவை நாச்சியார் அவருடைய தந்தையுடன் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை விசாரித்தபோது 28.08.2022 அன்று இரவு 8.30 மணியளவில் புலிவலம் என்ற இடத்தில் தெரிந்த நபர் ஒருவர் வாயை கையால் மூடி, கழுத்தை கையால் நெறித்ததாக அவர் கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுய நினைவுடன் காணப்பட்டார். அவருக்கு கழுத்தை சுற்றி வலி இருப்பதாகவும், இடது முதுகு தோள்பட்டை அருகே தொடு வலி காணப்பட்டது. இவருக்கு முதலுதவி அளித்து விபத்து பதிவேடு பதிவு செய்து மேல்சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்தேன். **(அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து 26 மணி நேரம் கழித்து தான் என்னிடம் அ.சா.1 சிகிச்சைக்கு வந்தார் என்றால் ஆமாம். அ.சா.1 கழுத்துபகுதியை சுற்றிய கன்னிய காயங்கள் எதுவும் காணப்பட்டதா

என்றால் இல்லை. வலி மட்டும் இருந்ததாக சொன்னார். ஒரு நபர் தனக்கு கழுத்து பகுதியிலும், தோள்பட்டையிலும் வலி இல்லாமலேயே வலி இருப்பதாக தானாகவே சொல்ல முடியும் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் அ.சா.1 ஐ தாக்கியவர் ஆணா, பெண்ணா என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவர் கூறியிருந்திருக்கலாம், நான் குறிப்பிட்டு எழுதவில்லை. அவர் கூறியிருந்தால் நான் பதிவு செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு பதிவு செய்யாததால் நான் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

(ஒம்/– S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
திருவாரூர்.